

# நாட்டிய ஆச்சாரிய மணி
# சாந்தா பொன்னுத்துரை

- ப. ஸ்ரீஸ்கந்தன்

*'பண்ணும் பதமேழும் பலவோசைத் தமிழவையும்
முண்ணின்றதோர் சுவையுமுறு தாளத் தொலிபலவும்...'*

என சம்பந்தர் சொல்லிச் செல்லும் நடனக்கலையை சாஸ்த்திரிய முறைப்படி பயின்றவர். தன் மூன்று வயதில் காலில் சலங்கை கட்டியவர். கலைகளின் புனிதமான இடம் என கருதப்படும் கலா ஷேத்திரம் நுண்கலைக்கூடத்தின் மாணவி. இந்தியாவில் நடனக் கலையில் முதுமானிப் பட்டம் பெற்ற முதல் இலங்கையர் என்ற பெருமைக்குரியவர். கண்டிப்பும் கண்ணியமும் மிக்க நடன ஆசிரியை என அறியப்படுவர். இவ்வாறு நடனக்கலைக்காகத் தன்

வாழ்வின் பெரும்பகுதியை அர்ப்பணித்து இயங்கிவரும் நாட்டிய ஆச்சாரியமணி சாந்தா பொன்னுத்துரை அவர்களை இம்மாத



ஆழத்துமுத்துகள் பகுதியில் பதிவிடுவதில் தாய்வீடு பெருமையும் மகிழ்ச்சியும் கொள்கிறது.

இயல்பாக, மிக சரளமாக, மனம்திறந்து நடனக்கலை பற்றியும் தன் கலைவாழ்வையும் அவ்வாழ்வில் ஏற்பட்ட அனுபவங்களையும் சுவைபடக் கூறிய அந்தத் தருணங்கள் அற்புதமானவை.

இவர் யாழ்ப்பாணத்து அரசதானியாக விளங்கிய நல்லூரில் பிறந்தவர். தந்தையார் டானியல் பொன்னுத்துரை. தாயார் பேர்ள் கிருபைமலர். அந்நாளில் யாழ். பிரதான வீதியில் எஸ்.ஆர் இராசநாயகம் என்பவரால் நடத்தப்பட்ட யாழ்ப்பாண நடனக் கல்லூரியில் பரதக்கலையைப் பயில மூன்று வயதில் இவர் சேர்க்கப்பட்டார். அன்றிலிருந்து இன்றுவரை பரதக்கலையே தன் வாழ்வாக இயங்கிவருகிறார் பரதக்கலா வித்தகி சாந்தா பொன்னுத்துரை அவர்கள்.

இந்தியாவிலிருந்து வருகை தந்தவர்களே இப்பாடசாலையில் ஆசிரியர்களாகப் பணியாற்றினர். இவ்வாறு வந்த நடன ஆசிரியர்களான செல்லப்பன் - பவானி இணையர், சுகுமார் ஆகியோரிடம் ஆரம்ப நடன அடவுகளைப் பயின்றார். பிரபல மிருதங்க வித்துவான் எஸ். இராமநாதன் இப்பாடசாலையில் மிருதங்க ஆசிரியராக இருந்தார்.

முன்னைய காலத்தில் பரதநாட்டியம் இழிவான கலையாக சமூகத்தின் மேல் வர்க்கத்தினரால் கருதப்பட்டு வந்தது. 1930களில் தமிழகத்தில் ஈ. கிருஷ்ணஜயர், பாலசரஸ்வதி, ருக்மணிதேவி அருண்டேல் போன்றோரின் அரும் செயற்பாடுகள் காரணமாக நடனக் கலையை எவரும் கற்று சிறப்பு அடையலாம் என்ற மதிப்பார்ந்த நிலைமை தமிழகம் கடந்து யாழ்ப்பாணத்திலும் ஏற்பட்டது. இத்தகைய நிலையில் நடனக் கலைஞர்கள் ஏரம்பு சுப்பையா, கந்தையா நல்லையா போன்றோர் யாழ்ப்பாணத்தில் நடன நிலையங்களை ஆரம்பித்து பல மாணவர்களை உருவாக்கினர்.

நடனத்தை அடுத்த கட்டத்தில் பயிலும் நோக்கில். ஈழத்து நடனப் பேராசான் ஏரம்பு சுப்பையா அவர்களது கலாபவனம் என்ற நாட்டியக் கலைக்கூடத்தில் இணைந்த சாந்தா அவர்கள் அவரையே குருவாக ஏற்று தன் நடனப் பயணத்தைத் தொடர்ந்தார். இலங்கையில் கீர்த்தனைகள், தேவாரங்களை நடன நிகழ்ச்சிகளில் வெற்றிகரமாகப் பயன்படுத்திய ஏரம்பு சுப்பையா அவர்களிடம் பரத நாட்டிய அறிவும் பயிற்சியும் மட்டுமன்றி அவர் அரங்கேற்றிய நாட்டிய நாடகங்கள் மூலம் அதன் நுணுக்கங்களையும் கிராமிய நடனங்கள் போன்றவற்றையும் இவர் கற்றுத் தேர்ந்தார்.

இவ்வாறு நடனக்கலையை ஏரம்பு சுப்பையா அவர்களிடமும் வழமையான கல்வியை சுண்டுக்குளி மகளிர் கல்லூரியிலும் பயின்று வரும் நாட்களில், தனது 15வது வயதில் நடனத்தில் இன்னொரு பரிமாணத்தைத் தொடும் நேக்கில் தமிழகத்தின் அடையாறில் இயங்கிவந்த 'கலாஷேத்திரம்' கலைக்கூடத்தில் இணைந்து கொண்டார். தஞ்சாவூர் திருவையாற்றுக் கலைமரபில் பிறந்து, நடனக் கலைக்கு நிலவிய சமூக இடையூறுகளை வெற்றிகரமாகக் கடந்து புரட்சி செய்த கலைமாமணி ருக்மணிதேவி அருண்டேல் அவர்கள் இந்நிறுவனத்தை ஆரம்பித்து நடத்தி வந்தார். உரையாடல் முழுதும் அவரை 'அத்தை' என அழைத்து வந்த சாந்தா பொன்னுத்துரை அவர்கள் நடனக்கலையின் தூயவடிவத்தை அவர் போதித்தாக் குறிப்பிட்டார்.

உண்மையான கலைகள் யாவற்றினதும் இன்றியமையாத ஒற்றுமையை வலியுறுத்தவும், தனிமனித, தேசிய, சர்வதேச, சமய வளர்ச்சியில் கலை செயற்படுதலை அங்கீகரிக்கும் வகையில் உழைத்தல் என்பவற்றை நோக்காகக் கொண்டது கலாஷேத்திரம். இங்கு மாணவர்கள் தொடக்கத்தில் ஓராண்டு பயிற்சியில் தகைமை பெற்ற பின்னரே, தொடர்ந்த நாலாண்டு கால நடனம், இசை போன்ற நெறிகளுக்கு அனுமதிக்கப்படுவர். அத்தையே அத்தெரிவை மேற்கொள்வார் என்றார். குருகுலவாசம் போல் நடைபெறும் இப்பயிற்சிகள் மிகுந்த கட்டுப்பாட்டுடன் நடைபெறும் எனக் குறிப்பிட்டார். நடனத்துக்கு அப்பால் சமஸ்கிருதம், அலங்கார சாஸ்திரம், மெய்யியல் போன்றவற்றையும் இவர் கற்றுக் கொண்டார். இந்தியாவின் பல்வேறு மாநிலத்தவர்களும், ஆசிய, மேற்குலக நாட்டவர்களும், திபெத்திலிருந்து அகதிகளாக வந்த சிலரும் இவருடன் நடனம் பயின்றுள்ளனர்.

பூந்தோட்டங்கள், சர்வமதஸ்தலங்கள், நூலகம் என சகல வசதிகளுடனும் கூடிய கலைக்கோவில் போல் காட்சியளிக்கும் கலா



ஷேத்திரத்தின் ரம்மியமான சூழலில் கலா, ஜெயா, தனஞ்சயன் போன்ற பெரும் நடனக் கலைஞர்களிடம் பயிற்சிகளும் பட்டறிவும் பெற்றுக்கொண்டதாகக் குறிப்பிட்டார். வருடாவருடம் நடைபெறும் ஆண்டு விழாவில் ஒரு தடவை பிரபல சிங்கள நடனக்கலைஞர் ஹேமலதா மிரண்டா அவர்களுடன் இணைந்து கண்டிய நட




னத்தை இவர் ஆடியுள்ளார். நாட்டிய நாடகங்களுக்குப் பெயர் பெற்ற கலாஷேத்திரத்தின் 'சபரி மோட்சம்' நாட்டிய நாடகத்திலும் இவர் பங்கேற்றுள்ளார். கலாசோத்திராவில் 5 வருட படிப்பை முடித்து, 1967ல் டிப்ளோமா பட்டம் பெற்றுக் கொண்டார்.

தமிழகத்தில் நாட்டியக்கலையை முறைப்படி பயின்று நாடு திரும் பியவருக்கு தான் படித்த சுண்டுக்குளி மகளிர் கல்லூரியிலேயே நடன ஆசிரியராகப் பணியாற்ற வாய்ப்புக் கிடைத்தது. 8 வருடங் களாக அங்கு கடமையாற்றிய அவர், பல மாணவிகளை நடனக் கலைஞர்களாக உருவாக்கினார். கல்லூரிக்கு நிதி சேகரிக்கும் நிகழ்வாக லவகுசா, அனார்கலி கதையை மையப்படுத்திய ராஜ நர்த்தகி ஆகிய இரு நாட்டிய நாடகங்களைத் தயாரித்து மேடை-யேற்றினார். கல்லூரியில் சங்கீத ஆசிரியையாக இருந்த திருமதி. ஆனந்தநாயகம், வருகைதரு ஆசிரியரான திரு. ஆனந்தநாயகம், பாடலிலும் ஆடலிலும் வல்லவராக விளங்கிய பத்மரஞ்சினி அரு ளம்பலம் ஆகியோரின் உதவியுடன் பாடல்களை எழுதி, இசைய மைத்து, நடன அமைப்பை மேற்கொண்ட அவ்விரு நாட்டிய நாட கங்களையும் இவர் அரங்கேற்றினார்.

அவ்விரு நாட்டிய நாடகங்களையும் என் சிறுவயதில் பார்த்த ஞாபகம் இருக்கிறது. நாடகங்கள் மட்டுமே பார்த்து வளர்ந்த எனக்கு இந்த நாட்டிய நாடகங்கள் பெரும் பிரமிப்பைத் தந்தன. பிரமாண்டமான காட்சியமைப்புடன் அவை அரங்ககேறின. லவ குசா நாட்டிய நாடகத்தில் இடம் பெற்ற போர்க் காட்சியில் திரை யில் அம்புகள் சரமாரியாக, எதிரும் புதிருமாகப் பாய்ந்து யுத்தக் களத்தை எம் கண்முன்னே நிறுத்தியது இன்னும் பசுமையான நினைவாக உள்ளது.

கலாஷேத்திரம் முடித்த அடுத்த வருடம் (1968)ல் தனது நடன அரங்கேற்றத்தை யாழ். நகர மண்டபத்தில் இவர் நிகழ்த்தினார். பிரபல கலை ஆர்வலரும் அப்போதைய யாழ். அரசாங்க அதிப ராகவும் இருந்த வேர்ணன் அபயசேகரா தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வுக்கு தமிழகத்திலிருந்து வருகை தந்த கலைஞர் கள் பின்னணி இசை வழங்கினர். பாட்டில் சங்கீத வித்துவான் சீதாராம சர்மா, மிருதங்கத்தில் காரைக்குடி கிருஷ்ணமூர்த்தி, நட் டுவாங்கத்தில் கலாஷேத்திரம் கமலராணி மற்றும் வயலினில் சங் கீதவித்துவான் தனதேவி மித்ரதேவா ஆகியோர் பின்னணி இசைக்கு அணி சேர்த்தனர்.

தொடர்ந்து சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் நடன ஆசிரியை யாகப் பணியாற்றிக் கொண்டு தனியாகவும் பல மாணவிகளுக்கு நடனம் பயிற்றுவித்தார். இக்காலம் (70கள்) இலங்கையில் குறிப் பாக யாழ்ப்பாணத்தில் நடனக்கலைக்கான பொற்காலமாக இருந் தது. சாந்தா பொன்னுத்துரை போல் நடனத்தை முழுமையாகக் கற்ற நல்ல தேர்ச்சியும் ஞானமும் பெற்ற பல கலைஞர்கள் நட னக்கலைக்கு மறுமலர்ச்சியை ஏற்படுத்தினர். இந்த வகையில் வழுவூர் இராமையாபிள்ளை வழிவந்த திரிபுரசுந்தரி யோகானந் தம், நாட்டியக் கலாநிதி கோபிநாத்திடம் கற்ற வேல் ஆனந்தன், பரதக்கலைமாமணி ருக்மணி அருண்டேலிடம் பயின்ற கமலா ஜோன்பிள்ளை, வீரமணி ஐயர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவ்வாறு இவர்கள் மூலம் நடனக்கலையின் பல்வேறு ஆடல் முறைகள் ஈழத்தவர்களுக்கு வந்து சேர்ந்தன.

நடனக் கலையே தன் மூச்சாக இயங்கிவரும் பரதகலா வித்தகி சாந்தா பொன்னுத்துரையின் மாணவிகளின் முதலாவது அரங்கேற் றம் 1972ல் யாழ்ப்பாணத்தில் இடம் பெற்றது. விநோதினி அரசரட்-ணம், ராகினி அரசரட்ணம் சகோதரிகளின் அரங்கேற்றம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் வெகு விமரிசையாக நடைபெற்றது. தொடர்ந்து மீனா பரம் தில்லைராஜா, தமயந்தி பரம் தில்லை-ராஜா, தாரிணி கணேசையா ஆகிய இவரது மாணவிகளின் அரங் கேற்றங்கள் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுள்ளன.

1960ல் சேர். பொன் இராமநாதனின் மருமகனான க. நடேச-பிள்ளை என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட இராமநாதன் இசைக்கல் லூரியில் வாய்ப்பாடு, வாத்திய இசை என்பன கற்பிக்கப்பட்டு வந்தன. 1974ல் நாட்டியக்கலை ஒரு கற்கைநெறியாக அறிமுகப் படுத்தப்பட்ட போது அதன் முதல் ஆசிரியையாக சாந்தா பொன்-னுத்துரை அவர்கள் நியமிக்கப்பட்டார். 1975ல் பேராசிரியர் கைலா-

சபதியின் முயற்சியால் இராமநாதன் இசைக்கல்லூரி, யாழ்ப்பாண வளாகத்தின் ஒரு பிரிவாக இராமநாதன் நுண்கலைக்கூடம் எனத் தரமுயர்த்தப்பட்டது. இந்த நுண்கலைப் பீடத்தின் நடனத்துறைக் குத் தலைவராகவும் விரிவுரையாளராகவும் இவர் பதவி உயர்வு பெற்றார். அந்தத் துறைக்கான பாடவிதானத் தயாரிப்புகளை இவரே மேற்கொண்டார். நான்கு வருட நடனக் கற்கை நெறியில் பத்மரஞ்சினி அருளம்பலம், ஜெயந்தி சதாசிவம், ஜெயந்தி ஆறு-முகம், யசோதரா சபாரட்ணம் ஆகிய நான்கு மாணவிகள் மட்டுமே முதலாவது தொகுதியில் இணைந்திருந்தனர். பின்னாளில் இத்துறை மிகவும் பிரபல்யமானதாக நிறைய மாணவர்களைப் பெற்றமை சிறப்பு.

இந்நாட்களில் விசுவாச ஒளி, ஜீவ ஒளி ஆகிய கிறிஸ்தவ நாட்டிய நாடகங்களையும் ஓவியன் கனவு என்ற நாட்டிய நாடகத்தையும் மேடையேற்றினார். மேலும், நாடகம் ஒன்றுக்கு நடனக் காட்சிகள் அமைத்துப் புதுமை செய்தவர் சாந்தா அவர்கள். பேராசிரியர் சி. மௌனகுரு 'சக்தி பிறக்குது' என்ற நாடகத்தை எழுதித் தயாரித்த பொழுது குழந்தை ம. சண்முகலிங்கத்தின் ஆலோசனைக்கு அமைய நுண்கலைப்பீட மாணவிகளையும் முதன் முதலாக இணைத்துக் கொண்டார். அடக்குமுறைக்கு எதிராகப் பெண்கள் அலையலையாக எழுந்து போராடும் இறுதிக் காட்சிக்கான நடனக் கோலத்தை இவர் அமைத்தார். 'சக்தி பிறக்குது நாடகத்தைத் தூக்கி உச்சியில் வைத்தது அந்த நடனக்காட்சி. பெண்களின் சக்தியை பரத அசைவுகளூடாகப் புலப்படுத்திய அவரின் அபாரமான கற்பனையைப் புரிந்து கொண்டேன்' எனக் கூறும் பேராசிரியர் சி. மௌனகுரு 'சாந்தா அவர்கள் சிருஷ்டித்துவம் மிக்க கலைஞர். எளிமையான உடையலங்காரம், உடலை எப்போதும் மெலிதாக வைத்துக்கொள்ளும் பக்குவம், நடந்தால், இருந்தால் நிமிர்ந்து இருக்கும் ஒரு ராஜகம்பீரம். ஆடலில் அங்க சுத்தம், செம்மை, ஒழுங்கு, நளினம், தெளிவு, அழகு என்பவற்றில் மிகவும் கண்டிப்பாக இருப்பார்.' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

வடஇலங்கை சங்கீத சபையில் நடனம் ஒரு கற்கை நெறியாகச் சேர்க்கப்படுவதற்கும் அதற்கான பாடவிதானத்தைச் செழுமைப் படுத்தலுக்கும் பின்னால் இவரது உழைப்பு உள்ளது. வட இலங்கை சங்கீத சபையின் பரீட்சகராகவும் இலங்கை கல்வி அமைச்சின் நடன பாடப் பரீட்சகர் குழுவில் ஒருவராகவும் நடனத்துக்கான பாடவிதான திட்ட வல்லுநராகவும் இவர் பணிபுரிந்துள்ளார்.

கலாஷேத்திரத்தில் 5 வருடங்கள் நிறைவு செய்து, இராமநாதன் நுண்கலைக்கூடத்தில் ஆசிரியர், விரிவுரையாளர், துறைத்தலைவர் என பல பதவிகள் வகித்து, நடனக்கலை குறித்த பல பணிகளை ஆற்றிய பின்னரும் மேலும் கற்க வேண்டும் என்ற தாகத்தால் 1983ல் பம்பாய் சென்று, அங்குள்ள நாளந்தா நிருத்தியகலா மகா வித்தியாலயத்தில் மூன்று வருடங்கள் பயின்று நடனக்கலையில் முதுகலைமானி பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். இந்தியாவில் நடனத்தில் முதுகலைமானி பட்டம் பெற்ற முதல் இலங்கையர் என்ற பெருமை இவருக்கு உண்டு என பேராசிரியர் வி. சிவசாமி பதிவு செய்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து, 1987ம் ஆண்டு சிங்கப்பூரில் இயங்கும் இந்திய நுண்கலைக்கூடத்தின் அழைப்பை ஏற்று அங்கு நடன விரிவுரையாளராகப் பணியாற்றினார். இதன் காரணமாக இராமநாதன் நுண்கலைப்பீடத்தில் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு பீடத்தின் முதற் தொகுதியில் இணைந்து கொண்டு முதற்தரத்தில் சித்தி எய்திய பத்மரஞ்சினி (அருளம்பலம்) உமாசங்கர் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சிங்கப்பூர் இந்திய நுண்கலைக்கூடத்தில் பல மாணவர்களுக்கு நடனம் கற்பித்து அரங்கேற்றம் செய்ததோடு சிங்கப்பூர் அரச விழாக்கள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், கலைவிழாக்கள் என்பவற்றுக்காக பல நடன நிகழ்வுகளையும் நாட்டிய நாடகங்களையும் தயாரித்து அளித்துள்ளார். அந்த வகையில் நௌகா விஹாரம் (நாட்டிய விழா - 1987), ஷியாமா (நாட்டிய விழா -1991), கண்ணப்ப நாயனார், இராமாயணம், காலிங்க நர்த்தனம், ராகத்வனி, அறுவடை நடனம் (சிங்கப்பூர் இளைஞர் விழா - 1991) மக்டலின் மரியம், அமைதிக்கான கூறுகள் (ஆசிய நடன விழா -1996) ஆகியவை இவருக்குப் புகழ் சேர்த்தவையாகும்.

இந்நுண்கலைக்கூடத்தின் ஊடாக சர்வதேசப் புகழ்பெற்ற நடனக்கலைஞர்களான Dr. பத்மா சுப்பிரமணியம், பேராசிரியர் C.V. சந்-திரசேகர், V.P. தனஞ்சயன் ஆகியோருடன் இணைந்து நடன அமைப்பு செய்யும் வாய்ப்புகள் இவருக்குக் கிடைத்தன. Dr. பத்மா சுப்பிரமணியத்துடன் இணைந்து அரங்கேற்றிய 'ரிது மகாத்




மியம்' என்ற நாட்டிய நாடகம் 1992ல் சிங்கப்பூர் தேசிய கலைவிழாவிலும் ஹொங்கொங்கில் நடைபெற்ற சர்வதேச நாட்டாரியல் விழாவிலும் மேடையேற்றப்பட்டுப் பாராட்டுக்களைப் பெற்றுக் கெண்டது. இந்நிகழ்வில் 50 வரையான கலைஞர்கள் பங்குபற்றியமை நினைவு கொள்ளத்தக்கது. மேலும், பேராசிரியர் C.V. சந்-திரசேகருடன் 'பஞ்ச மஹாபூதம்', V.P. தனஞ்சயனுடன் 'சங்கமித்திரா' ஆகிய நாட்டிய நாடகங்களில் இணைந்து பணியாற்றிப் புகழ் சேர்த்தவர் எமது கலைஞர் சாந்தா பொன்னுத்துரை அவர்கள்.

1992 முதல் கனடா வினிபெக் நகரின் நடன, சங்கீத, நாடகத்துக்கான இந்தியக் கல்லூரியின் ஆலோசகராகவும் நடனத்துறையின் பொறுப்பாளராகவும் கடமையாற்றி வருகிறார். ரொறன்ரோவில் இயங்கிவரும் சுருதி லய நுண்கலைக்கூடத்தின் பரதக்கலை இயக்குனராக 1999லிருந்து பணிபுரிகிறார். மேலும் பல்கலைக் கழகத்துக்கான புள்ளியீட்டும் பாடவிதானத்துக்குரிய நடனக் கற்கை நெறி ஆலோசகராகவும் விளங்குகிறார்.

இவரிடம் பயின்ற பல மாணவர்கள் உலகப்பரப்பெங்கும் புகழ் பூத்த நடன ஆசிரியைகளாக வலம் வருகின்றனர். இத்தகைய ஆசிரியைகளும் அரங்கேற்றம் செய்த இவரது மாணவிகளும் இணைந்து தங்கள் குருவின் 50 வருட கலைவாழ்வைத் போற்றும் வகையில் 2017ல் ரொறன்ரோவில் பொன்விழாவை நடத்திக் கௌரவம் செய்துள்ளனர்.

கலைகளால் கலைஞர்கள் பெருமை பெறுவதுண்டு. ஒரு சில கலைஞர்களால் மட்டுமே அவர்கள் சார்ந்த கலைகள் பெருமை கொள்ளும். அக்கலைகளின் மதிப்பும் உயர்வு பெறும். இத்தகைய நடனக் கலைஞர் தான் நாட்டிய ஆச்சாரியமணி சாந்தா பொன்னுத்துரை அவர்கள். நடனமே மூச்சாகவும் வாழ்வாகவும் வாழ்ந்து வரும் இப்பெருங்கலைஞரை தாய்வீடு வாழ்த்துகிறது.



sriskandan@thaiveedu.com